**தலைப்பு 254 – பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 254 – பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 யூன் 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூலை 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) வருமான பெறுவனவுகள்

திணைக்களத்திற்குரிய வருமான பொறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிலுவை வருமானம் தொடர்பாகன கூற்றில் (எசீஏ-1(i)) குறிப்பிட்ட முன்னைய ஆண்டிற்கான இறுதி மீதி ரூபா 29,386,888 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ரூபா 29,585,628 ஆக காட்டப்பட்டிருந்ததனால் நிலுவை வருமானத்தின் ஆரம்ப மீதி ரூபா 198,740 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரித்த திகதியின் பின்னரும் நிலுவை வருமான அறிக்கை கிடைத்தனால் மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதிக்கு அப்பெறுமதி செம்மையாக்கப்பட்டுள்ளது எனவும் அச்சிடல் தவறின் அடிப்படையில் சிங்கள | நிதிக்கூற்றுக்களில் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளை சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மொழியில் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றில் பதியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. | |

**(ஆ) மூலதனச் செலவுகள்**

நிதிக்கூற்றுக்களுக்குரிய மூலதனச் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | நிதியற்ற சொத்துகள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ-6) மீளாய்வாடின் கொள்வனவுகள் ரூபா 28,908,475 ஆகக் காட்டப்பட்டிருந்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய மூதலீடுகளைப் பெற்றுக்கொள்ளல் ரூபா 42,496,196 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 13,587,696 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. அது காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டிய மூலதனச் சொத்துக்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான ரூபா 11,643,451 தொகையையும் இயலுமையை மேம்படுத்துவதற்கான ரூபா 1,944,245 தொகையையும் உள்ளடக்கியிருந்தது. | ஏசீஏ-6 கூற்றில் நிதியற்ற சொத்தக்களின் ஆரம்ப மீதியை கூட்டுதல் ரூபா 13,474,615 தொகையானது 2021 ஆம் ஆண்டில் 254-1-1-2103 மற்றும் 254-1-2-2103 செலவு விடயங்களிலிருந்து கணனி கொள்வனவுக்கான நிதி ஏற்பாட்டு வைப்பாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்ட பணம் என்பதுடன் அப்பணம் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் வைப்புக் கொடுப்பனவாக பதியப்பட்டுள்ளது. காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் பௌதீக சொத்துக்களை கொள்வனவு செய்தல் அல்லது நிர்மாணங்கள் மற்றும் ஏனைய முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக செலவு செய்யப்பட்ட பணமாகிய ரூபா 42,496,196 தொகை மற்றும் ஏசீஏ-6 இன் பிரகாரம் மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளல் ரூபா 28,908,500 ஆக இருந்ததுடன் அதன் வித்தியாசம் ரூபா 13,587,696 தொகை மூலதனச் சொத்துக்களுக்கு | சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு கவனித்தக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேலதிகமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட மூலதனச் சொத்துக்களைப் புனரமைத்தல் மற்றும் மேம்பபடுத்துவதற்கான ரூபா 11,643,451 தொகையையயும் இயலுமையை மேம்படுத்துவதற்கான ரூபா 1,944,245 தொகையையும் உள்ளடக்கியுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | |
| (ii) | முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி உபகரணங்களின் மீதி முறையே ரூபா 70,463,867 மற்றும் ரூபா 90,907,280 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஆரம்ப மீதியாக அப்பெறுமதி முறையே ரூபா 70,542,267 மற்றும் ரூபா 90,828,880 ஆக ரூபா 78,400 ஆல் அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | முன்னைய அண்டிற்கான நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி உபகரணங்களின் இறுதி மீதியை மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக எடுத்துக்கொள்ளும் போது ரூபா 78,400 தொகை பிழையாக குறைத்தும் அதிகரித்தும் பதியப்பட்டிருந்தது. இது தவறுதலாக இடம்பெற்றுள்ளதுடன் இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாமைக்கு கவனித்துக்கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஆரம்ப மீதிகள் முன்னைய ஆண்டிற்கான இறுதி மீதியாக இருக்க வேண்டியதுடன் வித்தியாசம் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது தொடர்பாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 6 காணிப்பதிவாளர் அலுவலகங்களில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 1,953,068 நிலுவைப் பணத்தில் எப்பணத்தையும் மிளாய்வாண்டின் போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட இந்த ஆரம்ப மீதியில் நிலுவை மற்றும் தண்டப் பணமும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அந்த மீதிகளை ஏடுகளிலிருந்து அறிக்கையிடப்பட்ட அடிப்படையிலேயே நீக்குவதற்காக தகவல்களை வழங்குமாறு காணிப் பதிவளாளர் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் அறவீடு செய்யப்பட்டுள்ள ரூபா 3,411,990 தொகையான நிலுவை இணக்கப்பாட்டு வருமானமானது வருமான கூற்றில் (ஏசீஏ-1) நிலுவை வருமானங்களை சேகரித்தலின் கீழ் காட்டப்பட்டிருந்தும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட பதிவுசெய்தல் கட்டணங்கள் மேற்கூறிய நிலுவை வருமானங்களை சேகரித்தலுடனான வருமானங்களின் சேகரிப்பு மொத்தமாக ரூபா 2,170,059,734 ஆக வருமான கூற்றில் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே நொத்தாரிசுகளுக்கு வருடாந்தம் உயர் நீதிமன்ற சானிறிதழ்களை வழங்கும் கட்டணங்கள் தொடர்பாக ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களால் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட கடந்த ஆண்டு தொடர்பான நிலுவை | மீளாய்வாண்டில் ரூபா 3,411,990 பணம் நிலுவை இணக்கப்பாட்டு பணமாக அறவிடப்பட்டுள்ளதுடன் உரிய காணிப் பதிவாளர் அலுவலகங்களினால் அப்பணத்தை அறவீடு செய்யும் சந்தர்ப்பத்திலேயே ஆவணங்களை பதிவுசெய்யும் வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதனால் மீண்டும் ஒரு தடவை அப்பணத்தை ஏசீஏ01 பதிவேட்டில் நிலுவை வருமான சேகரிப்புக்களின் கீழ் காட்டுவது அவசியமில்லை என தெரிவிக்கப்பட்டது.<br><br>எதிர்காலத்தில் இந்த அறிக்கையிடல் தொடர்பான தகவல்களைப் பெற்று ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என | நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல் முறைப்படியாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானங்கள் மற்றும் ரூபா 43,770 வருமானத்தை திருப்பி செலுத்துதல் ஏ.சீ.ஏ 1 படிவத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தெரிவிக்கப்பட்டது. ரூபா 43,770 வருமானத்தில் மீளச்செலுத்துதல்களுடன் தோறிய வருமானம் ஏசீஏ-01 பதிவேட்டில் பதியப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் மொத்த வருமானத்தில் வருமானத்தை திருப்பி செலுத்துதல் மற்றும் தேறிய வருமானத்தை தனித்தனியாகக் காட்டுவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கிறேன். | |
| (இ) | நி.பி 143(2) மற்றும் 175(2) இன் பிரகாரம் வருமானங்களை சேகரிக்கும் உத்தியோகத்தர்களால் அறவீடு செய்ய வேண்டியுள்ள நிலுவைப் பணத்தை சேகரிப்பதற்கு விசேட நடவடிக்கை எடுக்குமாறு மற்றும் அறவீடு செய்யமுடியாத அனைத்து அறவீடுகளையும் கைவிடுவதற்கான ஒரு கட்டளையை கணக்கீட்டு உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதறங்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டி இருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பல ஆண்டுகளாக காணப்படுகின்ற நிலுவைப் பணத்தை சேகரித்துக்கொள்கையில் யாராவது ஒரு உத்தியோகத்தரின் கவனயீனம் அல்லது வினைத்திறனின்மை காரணமாக இருக்குமாக இருந்தால் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து நி.பி 176 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதானது நிலுவை வருமானமாக அலுவலகங்களினால் பேணப்படுகின்ற அறிக்கைகளில் குறிப்பிடப்படுகின்ற பணம் உள்ளபடியாக வருமானத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்தால் மாத்திரமாகும். அது பிழையியான அடிப்படையில் விதிக்கப்பட்ட அறிக்கைகளில் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ள வருமானத்தை அந்த நடைமுறைகளின் கீழேயே நீக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனத் திணைக்களத்தினால் உள்ளக சுற்றிக்கையும் வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | கணக்கீடு செய்யப்பட்டுள்ள நிலுவை வருமானங்களை முறையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி செயலாளரின் 2022 ஏப்ரல் 26 ஆந் திதகிய 03/2022 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க 254-01-01-1102 ஆம் இலக்க வெளிநாட்டு பயண செலவு விடயத்திற்கான நிதி ஏற்பாடு ரூபா 700,000 மற்றும் 254-01-02-1102 ஆம் இலக்க செலவு விடயத்திற்கான நிதி ஏற்பாடு ரூபா 500,000 ஆக ரூபா 1,200,000 தொகையான நிதி ஏற்பாடு முழுமையாக நி.பி 66 இன் மூலம் 254-01-01-1409 ஆம் இலக்க ஏனைய செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | 254-01-01-00-1102 மற்றும் 254-01-01-02-00-1102 செலவு விடயங்களுக்குரிய செயற்பாடுகளுக்கான சந்தர்ப்பம் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு கிடைக்காமையால் அந்த நிதி ஏற்பாடுகள்அத்தியவசியமான ஏனைய செலவு விடயங்களுக்காக நி.பி 66 இன் பிரகாரம் மாற்றப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி ஏற்பாட்டினை சேமிப்பதற்கு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் |
| (ஆ) | 08 செலவு விடயங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 4,718,473 செலவுகள் ஏனைய செலவு விடயங்களின் (1409) கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆலோசனை சேவை செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 450,000 தொகையானது ஏனைய செலவு விடயங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதியில் ஆலோசனை சேவை செல விடயத்தின் சேமிப்பு ரூபா 53,935 ஆக இருந்ததனால் அந்த ரூபா 450,000 தொகை சரியான செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்குமாயிருந்தால் ஆலோசனை சேவை செலவு விடயமானது ரூபா 394,065 ஆல் | 2022 ஆம் ஆண்டின் போது காலாண்டு அடிப்படையில் நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டதுடன் அந்த நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துதல் முடிவடைந்ததன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு நிதி ஏற்பாடு இல்லாததனால் கொடுப்பனவுகளின் அத்தியவசியத்தின் அடிப்படையில் நிதி ஏற்பாடு உள்ள பொருத்தமான செலவு விடயங்களிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டது.<br><br>திணைக்களத்தின் கடமைகளுக்கு தடை ஏற்படாது துரிதமாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. எதிர்காலத்தில் ஏனைய செலவு விடயங்களிலிருந்து செலவு செய்யும் பேது சரியான செலவு விடயத்திற்கு செலவு | சரியான செலவு வகைப்படுத்தலின் கீழ் கணக்கீடு செய்வதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| மிகைத்திருக்கும். | வைப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.<br><br>ஆலோசனை சேவையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 450,000 பணம் இச்செலவு விடயத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டதானது ஆலோசனை சேவை கொடுப்பனவுகளுக்காக ஒரு செலவு விடயம் ஒதுக்கீடு செய்யபசெய்யப்பட்டிருக்காததனால் என தெரிவிக்கப்பட்டது. | |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அத்தனகல்ல காணிப் பதிவாளர் வளவிற்காக மீளாய்வாண்டின் மே மாத்திலிருந்து திசெம்பர் மாதம் வரை செலுத்த வேண்டிய ரூபா 1,480,000 குத்தகைக்கான பொறுப்புக்களானது பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்தனகல்ல காணிப் பதிவாளர் அலுவலகத்தின் 2022 மே மாத்திலிருந்து திசெம்பர் மாதம் வரை செலுத்த வேண்டிய குத்தகை தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிக்காமையால் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது. | ஆண்டிற்கான அனைத்து பொறுப்புக்களும் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் உள்ளடக்குவதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | 07 செலவு விடயங்கள் தொடர்பான நிதி ஏற்பாட்டு எல்லையினை மிகைத்து மொத்தமாக ரூபா 112,296,712 பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்ட முழு நிதி எற்பாடும் வழங்கப்படாததனால் அனைத்து ஆண்டுகளிலும் நிதி ஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டது. மேலும் உரிய அனைத்து வவுச்சர்களுக்குமாக கொடுப்பனவு செய்வதற்கு கட்டுநிதி இல்லாமையாலும் பொறுப்புக்கள் ஏற்படுகின்றன என தெரிவிக்கப்பட்டது. | நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் செலவுகளை முகாமைத்துவம் செய்வதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் தீர்த்துவைக்கப்பட்ட ரூபா 54,820,889 பொறுப்புக்களானது பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இத்திணைக்களத்தின் 50 காணிப் பதிவாளர் அலுவலகங்கள், உதவி மாவட்ட பதிவாளர் அலுவலகங்களிலிருந்து உரிய தகவல்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்குதல் முறைப்படியாக இடம்பெற்றிருக்காமையால் இந்த நிலைமை அறிவிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் முடியுமான அளவு சரியாக கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களைச் சமர்ப்பிப்பதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | ஆண்டிற்குரிய அனைத்து பொறுப்புக்களும் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் உள்ளடக்குவதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஈ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை தீர்த்துவைக்கும நடைமுறையின் அனைத்து நடவடிக்கைகளும் சிகாஸ் கணக்கீட்டு முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்களைத் தீர்த்துவைக்கும் நடைமுறையின் அனைத்து நடவடிக்கைகளும் சிகாஸ் கணக்கீட்டு முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் எதிர்காலத்தில் சரியாக கணக்கீட்டு முறைமைக்குள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும் முன்னைய ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள முறைமையில் உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது. | சுற்றிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கிய நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஈ- லேன்ட் செயற்திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டின் போது வர்த்தக அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 50 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 13.4 மில்லின் செலவு செய்து உபரகணங்களை கொள்வனவு செய்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 36.2 மில்லியன் வழங்கப்பட்டிருந்தும் அதில் பயன்படுத்தப்பட்டிருந்தது ரூபா 2.08 மில்லியன் மாத்திரமாகும். இதற்கிணங்க செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்கள் மற்றும் ஏனைய நிதி எற்பாடுகள் செயற்திட்டத்தின் குறிக்கோள்களுக்காக பயன்படுத்தப்படாது திணைக்களத்தின் ஏனைய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டின் போது உரிய பொருட்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் முடிவடைந்திருந்தும் உரிய ஆண்டில் ரூபா 13.4 மில்லியன் உபகரணங்களை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்தது என தெரிவிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் அப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக திணைக்களத்தின் செலவுத் தலைப்புக்களில் (2103) மிகுதியாக இருந்த நிதி எற்பாடு விசேட வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் கட்டளையிடப்பட்ட பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2022 ஆம் ஆண்டின் போது 254-01-02-2103 செலவு விடயத்திற்காக ரூபா 36.2 மில்லியன் நிதி எற்பாடு வழங்கப்பட்டிருந்தும் 2022 ஆம் ஆண்டில் அப்பணத்தில் ரூபா 2,080,000 இனை மாத்திரம் பயன்படுத்தக்கூடியதாக இருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. | ஏனைய நிறுவனங்களின் மூலம் வழங்கப்படுகின்ற நிதி எற்பாட்டினை நிதி ஏற்பாடு செய்யப்பட்ட விடயங்களுக்காகவே செலவு செய்வதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். |

### 2.5. பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியொகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்பட வேண்டுமென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வுசெய்து அதற்கிணங்க முறைமையை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய போதிலும் அந்த மீளாய்வினை எழுத்துமூலம் செய்து அதன் ஒரு பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்ப்பட வேண்டியிருந்தும் அவாவாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான என்பதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக உள்ளகக் கட்டுபாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்படுவதுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு உள்ளகக் கணக்காய்வாளரின் ஒருங்கிணைப்பின் கீழ் முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் ச்ட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | **அவதானிப்புக்கள்** | | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | | **பெறுமதி** | **இணக்கமின்மை** | | |
| | | **ரூபா** | | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவுகள் | 932,696 | 07 ஆண்டுகளிலிருந்து 28 ஆண்டுகள் வரையான காலத்தில் 24 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணம் சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கடனை அறவீடு செய்வதற்காக போதியளவு தகவல்கள் இல்லாமையும் விதவைகள், அனாதைகள் சம்பளத்திலிருந்து அறவீடு செய்யும் இயலுமை சிக்கலுடையதாக இருப்பதுவும் இதற்கு காரணமாக இருந்ததுடன் இன்னும் ஆய்வு செய்து உரிய கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கான நடைமுறை இல்லை என உறுதிப்படுத்தப்படுமாயின் இக்கடன் மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | தொடர்புபட்ட பிரிவிற்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

| | | | |
|---|---|---|---|
| நி.பி 571 | இரண்டு ஆண்டுகளை மிகைத்துள்ள காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அரையாண்டு ரீதியான பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அரையாண்டு ரீதியான பட்டியலை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | தொடர்புபட்ட பிரமாணத்திற்கு இணங்கியிருத்தல் வேண்டும். |
| நி.பி 571 (3) | இரண்டு ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை கொள்வனவு செய்தமைக்காக நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 2,173,898 பணம் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதிப்பணங்களையும் கொடுப்னவு செய்வதற்கு முடியவில்லையாயின் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | தொடர்புபட்ட பிரமாணத்திற்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | அரசாங்க நிதி சுற்றறிக்கை 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க சுற்றிக்கையின் 11.1 ஆம் பந்தி | திணைக்களத்தின் வருடாந்த பொருள் மீளாய்வு அறிக்கையில் குறிப்பிட்ட பற்றாக்குறைகள் மிகைகள், மற்றும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத பொருட்கள் சம்பந்தமாக சுற்றிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டின் பொருள் மீளாய்வு அறிக்கைகளுக்குரிய கட்டளைகளை அமுல்ப்படுத்துதலானது பொரும்பாலும் முடிவடைந்துள்ளது எனவும் அப்பொருள் மீளாய்வின் சிபாரிசுகளை அமுல்ப்படுத்துவதன் மூலம் 2021 ஆம் ஆண்டும் உள்ளடக்கப்பட்டபடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. | தொடர்புபட்ட சுற்றறிக்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும |
| | 13.2ஆம் பந்தி | கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டிய பயன்படுத்த முடியாத 05 வாகனங்கள் சம்பந்தமாக சுற்றிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கைதவிர்ப்பச் செய்வதற்கு இணங்காணப்படுகின்ற வாகனங்கள் பாதுகாப்பு அமைச்சிற்கும் கணக்கு தணிக்கையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கும் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது | தொடர்புபட்ட சுற்றறிக்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும |
| (iv) | அரச நிதிக் கொள்கை 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 சுற்றிக்கையின் | சுற்றிக்கைக்கு இணங்க வருடாந்த வருமான அறிக்கையை அரசாங்க நிதிக்கொள்கை | உரிய அறிக்கையானது திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு | தொடர்புபட்ட சுற்றிக்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 07 ஆம் பந்தி | திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ச் சமர்ப்பிக்கப்பட்டுள் ளதுடன் எதிர்காலத்தில் அரசாங்க நிதிக்கொள்கை திணைக்களத்திற்கு ம் ஒரு பகுதியினை அனுப்புவதற்கு குறித்துக்கொள்ளப் பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. | |
| (v) | பதிவாளர் நாயகத்தின் 2022 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 15/2022 ஆம் இலக்க சுற்றிக்கை | 31 காணிப்பதிவாளர் அலுவலகங்களிலிருந்து மீளாய்வாண்டிற்கான 115 அறிக்கைகள் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிரு க்கவில்லை. | அறிக்கைகளை வழங்குதல் தாமதமடைந்துள்ள தனால் அறிக்கைகளை வழங்க வேண்டிய முறைமைகள் தொடர்பாக சுற்றிக்கையின் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது டன் அதற்கிணங்க நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய அறிக்கையை தாமதமின்றி வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டிருந் தது. | தொடர்புபட்ட சுற்றிக்கைக்கு இணங்கியிருத் தல் வேண்டும். |

## 2.7 முற்பணங்கள் வழங்கதலும் தீர்த்துவைத்தலும்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | 06 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 129,000 முற்பணம் உரிய செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்படாது 20 நாட்களிலிருந்து 05 மாதங்கள் வரையான கால வீச்சில் கையில் வைத்திருந்தது முழுப் | உரிய செயற்பாடு முடிவடைந்த உடன் முற்பணத்தை தீர்த்துவைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் உரிய கட்டுநிதி தீர்த்துவைக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டதுடன் | செயற்பாடு பூர்த்தியடைந்த உடன் தீர்த்துவைப்பதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணமும் மீளத் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தாமதமின்றி முற்பணத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | நி.பி 371 (2) (அ) இன் பிரகாரம் குறித்த செயலுக்கான உப கட்டுநிதியினை ஏற்றுக்கொள்கின்ற உத்தியொகத்தர் உரிய செயற்பாட்டை பூர்த்திசெய்த உடன் அந்த உபகட்டுநிதியை தீர்த்து வைக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 909,070 தொகையான 15 உப கட்டுநிதிகளை தீர்த்துவைப்பதற்கு 13 நாட்களிலிருந்து 04 மாதங்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிட்ட அனைத்து உத்தியோகத்தர்களிடமிருந்தும் தாமதத்திற்கான காரணம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் தாமதமின்றி முற்பணத்தை தீர்த்து வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | முற்பணங்களை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கள் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.8 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நவம்பர் 15 ஆந் திகதியளவில் பொது வைப்புக் கணக்கில் இருந்த ரூபா 79,675 இனங்காணப்படாத வைப்புக்கள் 2023 மார்ச் மாதம் வரை இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவாளர் நாயகத்தின் வங்கி கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட்ட அப்பணம் பின்னர் மீளச் செலுத்த வேண்டி ஏற்படுமாயின் செலுத்துவதற்காக வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது என தெரிவிக்கப்பட்டது. இக்காசோலைகள் தொடர்பாக மீண்டும் வங்கியிடம் விசாரித்துப் பார்த்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாது போகுமாயின் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. | பொது வைப்புக் கணக்கில் இனங்காணப்படாத வைப்புக்கள் உருவாகுவதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தின் அங்கீகரித்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 17.5 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பதிலாக ரூபா 13.4 மில்லியன் செலவு செய்து அங்கீகரித்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ஏனைய 03 நிகழ்சித்திட்டங்கள் ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறே மீளாய்வாண்டின் போது நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்ட ரூபா 1.7 மில்லியன் தொகையான இன்னும் 39 நிகழ்ச்சித்திட்டங்களில் 05 நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டு மிகுதி நிதி ஏற்பாடானது அங்கீகரித்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்படுகின்ற சிறப்பற்ற சமூக நிலைமை, பிரதான தேவைப்பாடுகளுக்காக முன்னுரிமையளித்தல், தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் செலவுகளை மட்டுப்படுத்தும் சுற்றிக்கைகள் என்பவற்றினால் கணக்காய்வு ஐயவினாவின் நிலைமை உருவாகியுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும். |

### 3.2. எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்து கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | காணி ஆவணங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கையை இணையவழிப்படுத்தும் குறிக்கோளில் ஈ-காணிகள் (e-Land) செயற்திட்டத்திற்கான பத்திரங்களை ஸ்கேன் செய்யும் நடவடிக்கையானது 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தும் | 2018 ஆம் ஆண்டு வரையும் 20 அலுவலகங்களில் பத்திரங்களை ஸ்கேன் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் இணைய வழி முறைமையில் அந்த பத்திரங்களைப் பரீட்சிக்கும் போது உருவாகிய சில சிக்கல்களினால் உரிய மென்பொருள் கட்டம் III இன் மூலம் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு | பல ஆண்டுகளாக அமுல்ப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த பெறுபேறுகளை துரிதமாக அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டு தனியார் நிறுவனங்களால் திணைக்களத்தின் கீழுள்ள காணிகளை 50 பதிவாளர் அலுவலகங்களில் 20 அலுவலகங்களிலேயே 2018 ஆம் ஆண்டுவரை மாத்திரம் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது டன் அந்த 20 அலுவலகங்களிலும் ஸ்கேன் செய்யப்பட்டிருந்த பத்திரங்களின் அளவு 11,595,197 மாத்திரமாகும். 2018 ஆம் அண்டின் பின்னர் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களை ஸ்கேன் செய்தல் இடம்பெற்றிருக்காமை மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட கம்பனிகள் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்குத் தவறியமையின் அடிப்படையில் செயற்திட்டத்தினால் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | வருகின்றது என தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கும் ஏனைய தரப்பினர்களின் தேவைப்பாட்டிற்குமாக காணிப் பதிவேட்டினைப் பரீட்சிக்கும் நடவடிக்கையினை இணையவழியில் மேற்கொள்வதற்கு வசதிகளை வழங்குவதற்கும் ஆவணங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் குறிக்கோளுடன் அமுல்ப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட ஈ- | மென்பொருளை மீள் உருவாக்கம் செய்யும் நடவடிக்கை தற்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகின்றது. எனவும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக கிடைத்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆரம்பத்தில் மென்பொருளை ஸ்தாபிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட 20 ஆலவலகங்களுக்கும் கணிப்பதிவாளர் அலுவலகங்களுக்கும் அதற்கு மேலதிகமாக தலைமை அலுவலகத்திற்கும் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. | பல ஆண்டுகளாக அமுல்ப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த பெறுபேறுகளை துரிதமாக அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

காணிகள் (e-Land) கணனி நிகழ்ச்சித்திட்டத்தினை மீள் உருவாக்கம் செய்யும் நடவடிக்கை 2016 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தும் மென்பொருளில் காணப்பட்ட சிக்கல்களின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றிலிருந்து எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததுடன் அது வரையும் கொழும்பு மற்றும் ஹோமாகம காணிப்பதிவாளர் அலுவலகங்களுக்கு மாத்திரம் இந்நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக திணைக்களத்திற்கு ஏனைய நிறுவனங்களின் நிதி எற்பாட்டின் அடிப்படையில் வழங்கப்பட்ட இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய கருவிகளின் பெறுமதி ரூபா 98.7 மில்லியனாகும். இவை தலைமை அலுவலகத்தின் பிரிவுகளுக்கிடையே மற்றும் காணிப் திவாளர் அலுவலகங்களுக்கு மத்தியில் பகிரப்பட்டிருந்தும் அவற்றில் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த கொழும்பு மற்றும் ஹோமாகம காணிப்பதிவாளர் அலுவலகங்களில் ஆரம்பக் கட்டம் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது.

மென்பொருட்களை மூன்று கட்டங்களில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் I ஆம் கட்டத்தின் நவீன மயப்படுத்தும் நடவடிக்கை தற்பொழுது முடிவடைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் I ஆம் கட்டத்தை பூர்த்திசெய்த 7 அலுவலகங்களில் ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. . அவ்வாறே II ஆம் கட்டத்தின் நடவடிக்கைகளையும் இவ்வாண்டு முடிவடைவதற்கு முன்னர் முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உபகரணங்கள் மற்றும் ஏனைய கருவிகளை பயன்பாட்டிற்கு எடுத்து மேற்கூறிய 7 முன்னோடி அலுவலகங்களில் இந்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் மென்பொருளின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரசாங்க துறையை மீளமைப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சம்பந்தமான தகவல்கள் மற்றும் நாளதுவரையாக்கிய தகவல்களை உள்ளடக்கிய ஒரு தரவு முறைமையினைத் தயாரித்து பேணும் குறிக்கோளில் 2010/2011 ஆம் அண்டளவில் ICTA நிறுவனத்தின் ஈடுபாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மென்பொருள் முறைமையானது 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் இதன் மூலம் எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.<br><br>அதற்கிணங்க நாட்டிலுள்ள பிரதேச செயலகங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துவதற்கான நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 331 லெப்டொப் கணனிகள் மற்றும் துணைக்கருவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தும் 14 மாவட்டங்களைச் சேர்ந்த 44 பிரதேச செயலகங்களில் 2021 ஆம் ஆண்டு தொடர்பான தரவு முறைமைக்கு பதிவுசெய்யப்பட்ட 53,739 பிறப்புக்களில் 01 பிறப்பு மாத்திரம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட 23,467 மரணங்களில் 04 மரணங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தன. | 2008 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டுள்ள ஈ-குடித்தொகை ஆவண நிகழ்சித்திட்த்தில் 2017 ஆம் ஆண்டிலிருந்து தரவு முறைமையின் சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை பதிவாளர் நாயகம் திணைக்களம் பொறுப்பேற்று 2019 ஆம் ஆண்டுவரை தரவுகளை உள்ளடக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2019 நவம்பரிலிருந்து அந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது.<br><br>பின்னர் 2021-01-01 ஆந் திகதி மற்றும் அத்திகதியின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு தொடர்பான தகவல்களை உள்ளடக்குவதற்கும் 2021-01-01 ஆந் திகதி மற்றும் அத்திகதியின் பின்னர் பிறந்த பிள்ளைகளுக்காக தேசிய பிறப்புச் சான்றிதழினை வழங்கும் குறிக்கோளில் இந்த நிகழ்ச்சித் திட்டமானது 06 முன்னோடி அலுவலகங்களினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ன எனவும் தற்பொழுது அனைத்து பிரதேச செயலகங்களிலும் அமுல்ப்படுத்தப்படுகின்ற e-BMD செயற்திட்டத்தின் கீழ் 1960 இலிருந்து 2022 வரை பதிவு செய்யப்பட்ட பிறப்பு திருமண மற்றும் இறப்பு சான்றிதழ்கள் ஸ்கேன் செய்யப்பட்டு அதனூடாக சான்றிதழ் பிரதியினை வழங்குதலும் இடம்பெறுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. தற்பொழுது 2021-01-01 | பல ஆண்டுகளாக அமுல்ப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறே திருமணம் தொடர்பான தகவல்களை எந்த பிரதேச செயலகமும் பேணி இருக்கவில்லை. | இலிருந்து 2023-06-13 வரை உள்ளடக்கப்பட்ட பிறப்புக்களில் பெற்றோர்களின் உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட 101,014 தரவுகளை அச்சிடுவதற்காக முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும் ஈ - குடித்தொகை ஆவணத்தை நிகழ்ச்சித்திட்டத்தினூடாக திருமணத்தை பதிவுசெய்யும் நடைமுறையானது இனறுவரை ஆரம்பிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. | |

## 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை - 2006 இன் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்தது 3 ஆண்டுகள் காலத்திற்கு எதிர்பார்த்த பெறுபேறுகளை உள்ளடக்கிய பிரதான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டினையும் உள்ளடக்கும் அவ்வாறான பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் படிவத்திற்கு இணங்க மூன்று ஆண்டுத் தகவல்களை குறிப்பிடுவதற்கு இடம்ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை என தெரிவிப்பதுடன் எதிர்காலத்தில் கணக்காய்வு பிரிவுடன் கலந்தாலோசித்து சரிசெய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. | வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.6.1 ஆ(II) மற்றும் (IV) ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைகளுக்கான கேள்வி மனுக்களைக் கோரும் ஆவணங்கள் | மேற்கூறிய பெறுகைகள் தொடர்பாக 2006 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.6.1 (ஆ)(ii) மற்றும் (iv) ஆம் பிரிவுகளின் பிரகாரம் கேள்வி ஆவணங்கள் தொழில்நுட்ப | வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 2,542,200 தொகைக்கு கொள்வனவு செய்த 38 அச்சிடல் இயந்திரங்களின் பெறுகையின் போதும் உரிமையாண்மைப் பிரிவிற்காக அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்யும் போதும் அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டுக் குழவினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் தற்பொழுது அவ்வாறான பெறுகைகளுக்காகவும் உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | |
| (இ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 1,014,000 தொகைக்கு 10 ஆய்வு மேசைகளும் 07 கட்டுதல் மேசைகளும் கொள்வனவு செய்யும் பெறுகைகளின் போது உடன்படிக்கை செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பெறுகைகளுக்காக அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கையொப்பமிடப்பட்டிருக்காமை உண்மையானது என தெரிவிக்கப்பட்டது. ஏனைய பெறுகைகளின் போது இதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டதுடன் கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டுள்ள பெறுகைகளில் அனைத்து பொருட்களும் கிடைத்துள்ளன என தெரிவிக்கப்பட்டது. | வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இரண்டு வாகனங்கள் முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் விபத்துக்குள்ளாகியதனால் ஏற்பட்ட திருத்தம செய்யும் செலவு ரூபா 4,089,400 ஆக இருந்ததுடன் இந்த விபத்து சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| | (i) நி.பி 104 (1)(அ) இன் பிரகாரம் நநட்டம் அல்லது இழப்பு இடம்பெற்ற உடன் அந்த அளவு மற்றும் காரணத்தை உறுதியாக தெரிந்துகொள்வதும் அதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களை நிர்ணயித்துக் கொள்வதற்காகவும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | KA-8957 ஆம் இலக்க வாகனத்திற்கு மேற்கொண்ட தொடக்க விசாரணை அறிக்கை தற்பொழுது கிடைத்துள்ளதுடன் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் PH-0524 ஆம் இலக்க வாகனத்திற்கு உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்ட போதிலும் அந்த அறிக்கை இன்னும் கிடைத்திருக்காததனால் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என தெரிவிக்கப்பட்டதுடன் உரிய அறிக்கையினைப் பெற்றதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நி.பி 104 (3) மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 2.5 ஆம் பந்தியின் பிரகாரம் சேதம் ஏற்டுகையில் அது சம்பந்தமான முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேற்பட்ட தாமதம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுமாகவிருந்தால் பொது 283 படிவத்தில் தொடக்க அறிக்கையினையும் மூன்று மாதங்களுக்குள் நி.பி 104(4) இன் பிரகாரம் பூரண அறிக்கையினை பொது 284 படிவத்தில் முறைப்படியாக பூரணப்படுத்தி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் பொதுத்திறைசேரியின் அரசாங்க நிதித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 104(3) இன் பிரகாரம் நட்டம் அல்லது இழப்பு ஏற்பட்ட வாகனத்தின் விபத்து சம்பந்தமாக முழுமையான அறிக்கை/ தொடக்க அறிக்கையை தயாரிக்க முடியாது போனது உரிய இரண்டு வாகனங்களின் திருத்தங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை தேடிக்கண்டுபிடிப்பதற்கான சிக்கலினால் திருத்தம் செய்யும் நடவடிக்கை தாமதம் அடைந்துள்ளதனால் என தெரிவிப்பதுடன் எவ்வாறாயினும் விபத்து ஏற்பட்ட உடன் நி.பி இற்கு இணங்க அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 30/2016 ஆம் இலக்க 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு வாகனத்திற்கான | 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் மூலம் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளல் இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களில் இயந்திரப் பொறியியலாளரின் சிபாரிசினைப் பெற்று உரிய | சுற்றிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளகத் திருத்தங்களைச் செய்யும் போது வாகனத்தின் பகுதிகளை கழற்றிய கராஜினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களின் நியாயத்தன்மை சம்பந்தமாக அரசாங்க துறையிலுள்ள ஒரு நிறுவனம் தகமைபெற்ற இயந்திர பொறியியலாளரின் அறிக்கையை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் மேற்கூறிய திருத்தங்களின் மதிப்பீட்டிற்காக அவ்வாறான ஒரு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திருத்தங்களை மேற்கொள்ளல் கண்டிப்பாக செய்யப்படுவதுடன் வாகன விபத்துக்கள் சம்பந்தமாக இதற்குப் பின்னர் அக்குறைபாடுகளையும் தவறுகளையும் தவிர்த்துக்கொள்வதற்காக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. | |
| (iv) | மேற்கூறிய சேதம் இடம்பெற்று ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் அந்த வாகனங்களை திருத்தம் செய்தல் பூர்த்தியடைந்துள்ளது என 2023 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்தல் நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டதானது உரிய வாகனங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் சந்தையில் இல்லாததனால் என தெரிவிக்கப்பட்டது. எனினும் தற்பொழுது KA-8957 ஆம் இலக்க வாகனத்திற்காக ரூபா 1,694,450 தொகையான மதிப்பீட்டினை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் செலுத்துவதற்கு இணங்கியுள்ளது என தெரிவிக்கப்பட்டது. PH-0524 ஆம் இலக்க வாகனத்தின் மதிப்பீடு உரிய கராஜின் மூலம் தற்பொழுது வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 2,439,950 பணத்தை | திருத்தங்களை தாமதமின்றி மேற்கொண்டு சொத்துக்களுக்கான சேதத்தை குறைத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்காக தற்பொழுது காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என தெரிவிகப்பட்டது. | |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நி.பி 143(2) மற்றும் 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிக்கையின் 04(ஆ) பந்தியின் பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களினாலும் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அறவீடு செய்யவேண்டியுள்ள நிலுவை வருமானம் மேலும் மேலும் ஒன்று சேர்வதனை தவிர்ப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிப்பதிவாளர் அலுவலகத்தினால் விதிக்கப்படுகின்ற இணக்கப்பாட்டு பணம் விதிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அறிக்கையிடுதல் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் உரிய இணக்கப்பாட்டு பணம் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் கணக்கீடு செய்யப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. அலுவலகத்தினால் பேணப்படுகின்ற அறிக்கைகளில் குறிப்பிடப்படுகின்ற பணம் உண்மையாவே வருமானத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்தததால் மாத்திரமாகும். அப்பிழையின் அடிப்படையில் விதிக்கப்பட்டு அறிக்கைகளில் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ள வருமானம் அந்த நடைமுறையின் கீழேயே நீக்கப்பட வேண்டுமென தெரிவிப்பதுடன் இது தொடர்பாக திணைக்களத்தின் 11/2019 ஆம் இலக்க 2019 யூலை 23 ஆந் திகதிய சுற்றறிக்கை மற்றும் 15/2022 ஆம் இலக்க 2022 ஒக்தோபர் 21 ஆந் திகதிய திணைக்கள சுற்றிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. | நிதிப்பிமாணம் மற்றும் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக˙˙கை எடுத்தல் வேண்டும். |

## 4 நல்லாட்சி

### 4.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நொத்தாரிசுகளால் காணிகளுக்கு உறுதியை எழுதும் போது நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவில் குறிப்பிட்ட சட்டவிதிகள் முறையாக பின்பற்றாமை காரணமாக காணி உறுதியை பதிவுசெய்தலில் தாமதம் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைக்கு உட்பட்ட கொட்டாவ காணிப் பதிவாளர் அலுவலகத்திற்குரிய 03 பிரதேச செயலாளர் பிரிவுகளில் மீளாய்வாண்டில் பதிவுசெய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 379 உறுதிகள்/ ஆவணங்கள் மிளாய்வாண்டின் இறுதிவரை பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. | பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக அந்த ஆவணங்கள் பதிவுசெய்யப்படாது காத்திருக்கும் ஆவணங்களுக்கு உள்ளடக்கப்பட்டு உரிய நொத்தாரிசுகளை காணிப்பதிவு அலுவலகத்திற்கு அழைத்து குறைபாடுகளை சரிசெய்து பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு இத்திணைக்களத்திற்கு ஏற்பாடுகள் இல்லை. அண்மையில் 1907 இன் 01 ஆம் இலக்க நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் 26 ஆம் சட்ட விதி, 2022 இன் 31 ஆம் இலக்க நொத்தாரிசு திருத்திய அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க அந்த சட்டவிதிகளை மீறுகின்ற நொத்தாரிசுகளுக்கு பதிவாளர் நாயகத்தினால் அமைச்சருக்கு செய்யப்படுகின்ற வேண்டுகோளின் அடிப்படையில் நொத்தாரிசு பதிவியின் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் நிறுத்திவைக்கப்படாம் என தெரிவிக்கப்பட்டது. | கட்டளைச் சட்டத்தின் சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**5. மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரித்த பதவியணியினர் 2812 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 3821 ஆக இருந்ததனால் மிகையான மற்றும் பற்றாக்குறையான பதவியணியினர் முறையே 1272 மற்றும் 263 ஆகும். | கணக்காய்வு ஐயவினாவில் மிகைப் பதவியணியினராகக் குறிப்பிடப்படுவது அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையாவதுடன் பற்றாக்குறை பதவியணியினராகக் காட்டப்படுவது ஏனைய சேவைகளில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு மத்தியில் வெற்றிடமான எண்ணிக்கை என தெரிவிக்கப்பட்டது. | அங்கீகரித்த பதவியணிக்குள் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கான பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 400 ஆக இருந்த போதிலும் திணைக்களத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட உள்ளபடியான பதவியணியினர் 1672 ஆக இருந்ததனால் மிகையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 1272 ஆக இருந்ததுடன் இதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | மிகைப் பதவியணியான 1272 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து RG/AB/02/05/25 (நி.பி II) ஆம் இலக்க 2021-09-24 அந் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க அரசாங்க நிருவாக அமைச்சிடமிருந்து ஒருங்கிணைந்த சேவைக்குரிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. | முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | திணைக்களத்தின் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 06 பதவிகளையும் உள்ளடக்கி 18 பதவிகளின் அங்கீகரித்த உத்தியோகத்தர்கள் 263 நபர்கள் வெற்றிடமாகக் காணப்பட்டனர். | பற்றாக்குறையான பதவியணியினரைப் பெற்றக்கொள்வதற்காக ஒருங்கிணைந்த சேவை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு அரசாங்க நிருவாக அமைச்சிற்கு Pacis மென்பொருளினூடாக | வெற்றிடங்களை பூரணப்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |

தெரியப்படுத்தப்பட்டதுடன் பதிவாளர் சேவையின் வெற்றிடத்தை பூரணப்படுத்துவதற்காக ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க சிரேஷ்ட மட்ட பதவிகளுக்கான தகமைகளைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்கள் இல்லாமை, உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறல், இடமாற்றுதல் என்பவற்றினால் 263 உத்தியோகத்தர்களின் பற்றாக்குறைகள் காணப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.